# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.12 (LW 20 )

| **பெயர்** | சிவக்குமார் | **தொழில்** | |
|---|---|---|---|
| **தகப்பனார் பெயர்** | கூத்தன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நிலக்கோட்டை வட்டம் சிலுக்குவார்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 2021ஆம் ஆண்டு முசுவனூத்து கிராமத்தில் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். நிலக்கோட்டை காவல் நிலையத்தில் 15.07.2021ஆம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் எனது அலுவலகத்தில் இருந்த போது நிலக்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து போலீசார் தொலைபேசி மூலமாக என்னை வரச்சொன்னார்கள். சென்ராயன் கொலை வழக்கு சம்பந்தமாக வணிதாவை(ஏ2) கைது செய்துள்ளதாக சொன்னார்கள். நான் சுமார் 9.15 மணிக்கு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு காவல் நிலையம் சென்றேன் எனது உதவியாளர் பிரன்சிஸ் சவேரியார் என்பவரும் என்னுடன் வந்தார். காவல் நிலையத்தில் வனிதா(ஏ2) சென்ராயன் கொலை சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து வனிதாவிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் நானும் எனது உதவியாளர் பிரான்சிஸ் சவேரியாரும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை கொலை நடந்த சென்ராயன் வீட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், அவரை அழைத்து சென்றால் நான் கத்தியை எடுத்து ஆஜர்படுத்துவதாக வாக்குமூலம் கொடுத்தார். அதை போலீசார் பதிவு செய்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்ட பகுதி **அ.சா.ஆ.6ஆக** தற்போது குறியீட செய்யப்படுகிறது. பின்னர் போலீசார் வனிதாவை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். நானும் எனது உதவியாளரும் உடன் சென்றோம். வீட்டிற்கு அழைத்து சென்று மேல்மாடியில் இருந்து கத்தியை வனிதா எடுத்துக் கொடுத்தார். அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில்

நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.7ஆக** தற்போது குறியீடு செய்யப்படுகிறது. வனித்தா ஆஜர் செய்து போலீசார் கைப்பற்றி கத்தி என்னிடம் காண்பிக்கப்படுகிறது. அது **சா.பொ.1ஆக** தற்போது குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சென்றாயன் இறந்த தேதியில் நான் தான் அந்த கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 10.03.2021ஆம் தேதி காலை 6.00 மணியளவில் தகவல் கிடைத்தது. அந்த தகவலை எனது உதவியாளரிடம் சொல்லி சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்றேன். அப்போது போலீசார் அங்கு இருந்தார்கள். அப்போது நேரம் 6.30 மணிக்கு மேல் இருக்கும். அப்போது போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னிடம் கூறினார்கள். அப்போது போலீசார் வீட்டில் உள்ள அனைத்து இடங்களையும் வீட்டின் மாடி மற்றும் சுற்றி உள்ள இடங்களையும் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் பராமரிக்கும் பீட் புத்தகத்தில் சந்தேக மரணம் ஏற்பட்டால் அது குறித்து அதில் எழுதுவோம் என்றால் சரிதான். அப்போது இந்த மரணம் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அதன் பின்னிட்டு 4 மாதங்கள் கழித்து தான் என்னை விசாரித்தார்கள். அதற்கு இடையில் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் தகவல் கொடுத்த பிறகு நானும்எனது உதவியாளரும் தனித்தனியாக காவல் நியைத்திற்கு சென்றோம். அப்போது 2ஆம் எதிரி வனிதா காவல் நிலையத்தில் இருந்தார். எதிரியின் குடும்பத்தார் யாரும் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் சுமார் 1.30 மணி நேரம் இருந்தேன். அதன் பின் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். அப்போது நானும் என் உதவியாளரும் தனித்தனியாக போலீசார் தனியாகவும் சென்றோம் என்றால் சரிதான். அந்த வீடு பயன்பாட்டில் இருந்ததாத என்பது பற்றி நான் தெரிந்து கொண்டேன். கீழே உள்ள வீடும், மேலே உள்ள வீடும் பயன்பாட்டில் இருந்தன என்ற விபரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரியின் உறவினர்கள் யாரும் அப்போது அந்த வீட்டில் இல்லை. இறந்தவரின் இறப்பிற்கு பிறகு இந்து முறைபடி அவரது வீடு வெள்ளையடிக்கப்படும் என்றால் தெரியாது. அந்த வீடு வெள்ளை அடிக்கப்பட்டு இருந்ததா இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சென்ற போது குழந்தைகள் எதுவும் அந்த வீட்டில் இல்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னிட்டு அந்த வீட்டில் யாரும் இல்லை என்றால் சரிதான். இந்த விபரங்கள் குறித்து போலீசாரிடம் கூறினேன் என்றால் சரிதான். இறந்தவர் வீட்டின் வாசற்படி தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் ஒரு அறை, ஒரு சமையல் அறை உள்ளன என்றால் எத்தனை அறைகள் உள்ள என்று எனக்கு தெரியாது. எந்த அறையில் இருந்து கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினார் என்று எனக்கு தெரியாது என்றால் மேலே உள்ள கிழக்கு அறையில் இருந்து ஆஜர்படுத்தினார். கிழக்கு பக்கம் ஒரு அறையிருந்தால் மேற்கு பக்கமோ, தெற்கு பக்கமோ வேறு அறைகள் இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது. நான் அந்த வீட்டிற்க போகவில்லை என்றும் அதனால் தான் எத்தனை அறைகள் இருந்தன என்ற விபரம்

எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்து இருந்தனவா அல்லது வீடு காலியாக இருந்தனவா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த வீட்டிற்கு செல்லவில்லை என்றும் அதனால் தான் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்று சொல்வது சரியல்ல. அ.சா.ஆ.7 அத்தாட்சியில் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ,1 கத்தியின் நுனி கூர்மையாக உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் 2ஆம் எதிரி கைது செய்யப்படவில்லைஎ ன்றும் , அவர் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி மற்றும் சான்று பொருள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1**ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:19:50 +0530

Additional District Judge,

Dindigul.